| Page No. | |
|---|---|
| **சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்** | |
| **நாள்** | 03.04.2024 |
| MCOP | 151/2020 |
| **எமசா.1** | ச.ஜெயப்பிரகாஷ், இளநிலை உதவியாளர், மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம், பகுதி அலுவலகம், உத்தமபாளையம், தேனி மாவட்டம். |

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 03-ம் நாள் எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திருமதி.ஆர்.ஸ்ரீவித்யா.,B.Com.,M.A.,B.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ச.ஜெயப்பிரகாஷ் | ஜாதி | : |
| தந்தை பெயர் | ; | சமயம் | : |
| கிராமம் | : | தொழில் | : |
| தாலூக்கா | : | வயது | : |

முதல் விசாரணை -

நான் பகுதி அலுவலகம், உத்தமபாளையம், தேனி மாவட்டம். மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியாற்றிவருகிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சியம் அளிக்க மோட்டார் வாகன ஆய்வாளருக்கு சம்மன் சார்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வாளரின் அலுவல் பணியின் காரணமாக அவர் சார்பாக இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அனுமதிக்கடிதத்தின் பேரில் நீதிமன்றத்தில் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். அந்த அனுமதி கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அந்த கடிதம், **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை நீதிமன்றத்திற்கு

எடுத்துவந்துள்ளேன். விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் வாகனமான TN 60 R 1631 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வு அறிக்கையில் மேற்கண்ட இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த ஓட்டுநர் , கேரளா மாநிலம், இடுக்கி மாவட்டத்தை சேர்ந்த பாம்பாடும் பாறை, முருகேசன் மகன் குமார் என்பவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் அந்த சமயத்தில் சமர்ப்பிக்கவில்லை. மோட்டார் வாகன ஆய்வாளர் வாகனத்தை ஆய்வு செய்தபோது அனைத்து ஆவணங்களையும் பார்வையிட்டு பரிசீலனை செய்த பின்பு தான் ஆய்வாளர் அறிக்கை தயாரிக்கப்பபட்டதா என்றால் ஆம். அந்த சமயத்தில் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கும் பட்சத்தில் அதை தாக்கல் செய்திருப்பார்கள் என்றால் சரிதான். எனவே சம்பவ சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த குமாருககு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பது தெரியவருகிறது என்றால் சரிதான்.

**<u>மனுதாரரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

நான் தமிழ்நாடு போக்குவரத்து துறை என்றால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய முருகேசன் மகன் குமாருக்கு கேரளா மாநிலம் , இடுக்கியில் தான் முகவரி உள்ளது என்றால் சரிதான். அப்படி என்றால் குமார் இடுக்கியில் தான் ஓட்டுநர் உரிமம் பெற்றிருக்கவேண்டும் என்றால் சரிதான் . குமாருக்கு சம்பவசமயத்தில் வேறு எங்காவது ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்பதை கணினி மூலம் ஆய்வு செய்து தெரிந்து கொண்டோமா என்றால் பிறந்த தேதி மற்றும் ஓட்டுநர் உரிமம் எண் இருந்தால் தான் ஆய்வு செய்யமுடியும். மோட்டார் வாகன ஆய்வாளர் முறையாக ஆய்வு செய்யாமல் ஆயவு அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னாலும், அதனால் தான் விபத்தை ஏற்படுத்தியதாக சொல்லும் நபருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.